# அகத்துப் பெருமாள் திருவாராதனம்

அதோ தே3வா அவந்து நோ யதோ விஷ்ணுர் விசக்ரமே | ப்ருதி2வ்யாஸ் ஸப்த த4ாமபி4: |

ஸ்ரீவிஷ்ணவே நம: என்று ஸாஷ்டாங்கமாக ஸேவிக்கவும். பெருமாள், நாச்சியார்கள் சாற்றியிருக்கும் பழையபுஷ்பமாலைகளைக் களைந்து, வடிகட்டிய ஶுத்த தீர்த்தத்தால் ஓம் பூ4ர்பு4வஸ்ஸுவ: என பெருமாளுடைய பீடத்தை சுத்தி செய்யவும். பெருமாளு டைய ஸ்வரூபப்படி த்யானிக்கவும். பொதுவான த்யானம்:-

ஸுவர்ணவர்ணம் ரக்தாஸ்யம் ரக்தநேத்ரம் ஸுகே3ாத்வஹம்
ஶுகபிஞ்ச2ாம்ப3ரத4ரம் விஷ்ணும் ப்ரணவரூபிணம்
கிரீட ஹார கேயூர ப்ரலம்ப3 ப்3ரஹ்மஸூத்ரிணம்
ஸ்ரீவத்ஸாங்கம் சதுர்ப3ாஹும் ஶங்க2 சக்ர த4ரம் பரம்
த3க்ஷிணேநைக ஹஸ்தேந ப4க்தாநா மப4யப்ரத3ம்
வாமேநாப்யந்ய ஹஸ்தேந ஸ்வகட்யா மவலம்பி3தம்
ஏவம் ஸங்கல்ப்ய மதிமாநர்ச்சயேத் புருஷோத்தமம்

- எங்கெல்லாம் ஓம் ஸ்ரீவிஷ்ணவே நம: என்று உபசாரம் ஸமர்ப்பிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் ஓம் ஶ்ரியை நம: ஓம் ஹரிண்யை நம: என்று நாச்சியார்களுக்கும் உப சாரம் ஸமர்ப்பிக்கவும். எழுந்தருளியிருக்கும் பெருமாள் க்ருஷ்ணர், ராமர், நரஸிம்ஹர் என இருப்பின் அவருடைய சதுர்நாமா, அவருடைய நாச்சியார் சதுர்நாமாவால் உபசா ரம் ஸமர்ப்பிக்கவேணும். அனைத்துக்கும் முன் ஓம், பின் நம: 2-உம் சேர்க்கவும். 1. நாரஸிம்ஹாய, தபோநாத2ாய, மஹாவிஷ்ணவே, மஹாப3லாய 2. ஸ்ரீராமாய, த3ாஶரத2 யே, வீராய, காகுத்ஸ்த2ாய, ஸீதாயை, அயோநிஜாயை, லக்ஷ்ம்யை, வைதே3ஹ்யை, லக்ஷ்மணாய, லக்ஷ்மீ வர்த்3 த3னாய, ராமாநுஜாய, ஸௌமித்ரயே, ஹநுமதே, கபி ராஜாய, ஶப்3த3ராஜாய, மஹாமதயே 3. ஸ்ரீக்ருஷ்ணாய, புண்யாய, நாராயணாய, த்ரித3ஶாதி4பாய, ருக்மிண்யை, ஸுந்த3ர்யை, பவித்ர்யை, க்ருஷ்ணவல்லப4ாயை, ஸத்ய ப4ாமாயை, ஸத்யை, ஸந்நத்யை, க்ஷமாயை.

ப்ரதத்3 விஷ்ணுஸ் ஸ்தவதே வீர்யாய| ம்ருகே3ா ந பீ4ம: குசரோ கி3ரிஷ்ட2ா: | யஸ்யோருஷு த்ரிஷு விக்ரமணேஷு| அதி4க்ஷியந்தி பு4வனானி விஶ்வா | ஸ்ரீவிஷ்ணவே நம: ஆஸ னம் ததாமி என துளஸியை பெருமாளுடைய திருவடிகளில் சேர்க்கவும்.

அகத்துப்பெருமாள் திருவாராதனத்தில் ஒரே பஞ்சபாத்ர மும் உத்தரிணியும் போதும். கோவிலாக இருந்தால் ஐந்து பாத் ரங்கள் தென்கிழக்கு மூலை முதலாக நான்கு மூலைகளிலும் நடுவிலும் வைத்து அவற்றில் சந்த்ரனை ஆவாஹனம் செய்ய வும். சிலர் விபவமாக அகத்திலும் செய்ய விருப்பப் பட்டு அகத்திலும் இவ்வாறு ஐந்து பாத்திரம் சேர்த்து அகத்து (க்ருஹத்து) பெருமாளை விஶேஷமாக ஆராதிக்கிறார்கள்.

ஸ்னானம் - தென்கிழக்கு(அக்னிமூலை), அர்க்யம் - தென் மேற்கு(நிருருதிமூலை), பாத்யம் - வடமேற்கு(வாயு மூலை), ஆசமனம் - வடகிழக்கு (ஈஶான்ய மூலை), மத்தியில் சுத்த தீர்த்த பாத்ரம் வைக்கவும். இன்றைய நிலையில் பலரும் மத்தியிலுள்ள சுத்த தீர்த்த பாத்ரத்தில் தான், ஏலக்காய், லவங்கம், ஜாதிக்காய், ஜாதி பத்திரி, பச்சகற்பூரம் முதலியன சேர்ந்த தீர்த்த பரிமளத்தைச் சேர்க்கிறார்கள். அவ்வாறு செய்தாலும், ஸ்படிகத்தில் நேராக பரிமளத்தை சேர்த்தாலும் அது பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கப்படாத தீர்த்த மாதலால் அஃது உத்தமமில்லை. பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கப்படும் தீர்த்தத்தில் பரிமளம் சேர்ப்பதே உத்தமம்; ஶ்லாக்கியம்; நியாய்யம்; தர்மம்.

ஆகவே, தீர்த்த பரிமளத்தை போடுவதாக இருந்தால் பெருமாளுக்கு முக்கிய உபசாரமான அர்க்யத்திலும், ஆசமனத்திலும், பாநீய தீர்த்தத்திலும், ஸ்னான பாத்ரத்தி லும் மட்டும் சேர்க்கவும். பாத்ய பாத்ரத்தில் அருகம்புல், தாமரை, துளஸீ ஆகியவற்றை முக்கியமாகச் சேர்க்கலாம்.

ஸ்னானபாத்ரே வஸிஷ்ட2மாவாஹயாமி, அர்க்4ய பாத்ரே ஸோமமாவாஹயாமி, பாத்3ய பாத்ரே யஜ்ஞாங் க3 மாவாஹயாமி , ஆசமனபாத்ரே இந்து3மாவாஹயாமி , மத்4 யே ஶுத்3த4 தோய பாத்ரே சந்த்3ரமாவாஹயாமி என்று ஆவாஹனம் செய்யவும். இந்த தேவதைகள் அந்தந்த பாத் ரத்தைத் தாங்கியிருக்கிறார்கள் என்று பொருள். இவ்வாறே தூ4பே ப்3ருஹஸ்பதிம் தீ3பே ஶரியம் என்றெல்லாம் ஆவா ஹனம் செய்தால் அந்தந்த தேவதைகள் அந்தந்த த்ரவ்யம்/உபகரணத்தைத் தாங்கியிருக்கிறார்கள் என்று பொருள்.

இந்த த்ரவ்ய தேவதா ஸூக்ஷ்மம் அர்ச்சனாநவநீதத்திலும், பகவதாராதன சந்த்ரிகையிலும் நமக்குப் புலனாகிறது.

த்ரீணி பத3ா விசக்ரமே விஷ்ணுர் கே3ாபா அத3ாப்4ய: | ததோ த4ர் மாணி த4ாரயந்நு| ஶ்ரீவிஷ்ணவே நம: பாத்3யம் த3த3ாமி என சங்கு அல்லது உத்தரிணி ஜலத்தால் துளஸி யோடு பெருமாள் திருவடிகளை அலம்பவும்.

ஶந்நோ தே3வீ ரபி4ஷ்டய ஆபோ ப4வந்து பீதயே| ஶம் யோ ரபி4ஸ்ரவந்துந: | ஶ்ரீவிஷ்ணவே நம: ஆசமனம் த3த3ாமி என பெருமாள் திருவாய்க்கு அவரது திருக்கை மூலமாக துளஸி தீர்த் தத்தை பருக அளிக்கவும்.

இஷேத்வோர்ஜேத்வா வாயவ் ஸ் ஸ்தே2ா பாயவ்ஸ்ஸ்த2 தே3வோ வ்ஸ்ஸவிதா ப்ரார்ப்பயது ஶ்ரேஷ்ட2 தமாய கர்மண ஆப்யாயத்4வ மக்3னியா தே3வ ப4ாக3 மூர்ஜஸ்வதீ: பயஸ் வதீ: ப்ரஜாவதீ ரநமீவா அயக்ஷ்மா மாவ்ஸ்தேந ஈஶத மாக4ஶ கு3ம்ஸோ ருத்3ரஸ்ய ஹேதி : பரிவோ வ்ருணக்து த்4ருவா அஸ்மின் கே3ா ப தெள ஸ்யாத ப3ஹ்வீர் யஜ மாநஸ்ய பஶூந் பாஹி | ஶ்ரீவிஷ்ணும் ஸ்நாபயாமி என பெருமாளுக்கு/ஸாள க்ராமங்களுக்கு திருமஞ்ஜனம் செய்யவும்.

விஷ்ணோர்னுகம்வ் வீர்யாணி ப்ரவோசம்ய: பார்த்தி2வானி விமமே ரஜாகு3ம்ஸி யோ அஸ்கப4ாய து3த்தரகு3ம் ஸத4ஸ் த2ம்வ் விசக்ரமாணஸ் த்ரேதே4ாருக3ாயோ விஷ்ணோ ரராட மஸி விஷ்ணோ: ப்ருஷ்ட2மஸி விஷ்ணோப்ப ப்ஞப்த்ரேஸ் தே2ா விஷ்ணோஸ் ஸ்யூரஸி விஷ்ணோர் த்4ருவமஸி வைஷ் ணவமஸி விஷ்ணவே த்வா | ஸ்ரீவிஷ்ணவே நம: வஸ்த்ராபர ணைரலங்கரோமி என பெருமாளை வஸ்த்ர ஆபரணங்களால் அலங்கரிக்கவும்.

மீண்டும் பெருமாளுக்கு த்ரீணி பதா மந்த்ரத்தால் பாத்யம், ஶந்நோ தேவீ: மந்த்ரத்தால்ஆசமனமும் ஸமர்ப்பிக்கவும். தத்3 விஷ்ணோ: பரமம் பத3கு3ம் ஸ்த3ா பஶ்யந்தி ஸூரய: | தி3வீவ சக்ஷுராததம் | ஸ்ரீவிஷ்ணவே நம: புஷ்பந் த3த3ாமி பெருமாளுக்கு துளஸியுடன் கூடிய பூமாலையை சாற்றவும்.

தத்3 விப்ராஸோ விபந்யவோ ஜாக்3ருவாகு3ம் ஸஸ் ஸமிந் த4தே | விஷ்ணோர் யத் பரமம் பத3ம் || ஸ்ரீவிஷ்ணவே நம: க3ந்த4ம் ததாமி பெருமாளுக்கு சந்தனம் சாற்றவும்.

பரோ மாத்ரயா தனுவா வ்ருத4ான | ந தே மஹித்வ மன் வஶ்னுவந்தி | உ பே4தே வித்3ம ரஜஸீ ப்ருதி2வ்யா விஷ்ணோ தே3வத்வம்| பரமஸ்ய வித்2ஸே | ஸ்ரீவிஷ்ணவே நம: தூ4பம் தூ4பயாமி என பெருமாளுக்கு ஸுகந்தமான தூபமிடவும்.

விஷ்ணோ: கர்மாணி பஶ்யத யதோ வ்ரதாநி பஸ்பஶே| இந்த்ரஸ்ய யுஜ்யஸ் ஸக2ா | ஸ்ரீவிஷ்ணவே நம: தீ3பம் தர்ஶ யாமி என பெருமாளுக்கு தீபஹாரத்தி காண்பிக்கவும்.

த்ரிர் தே3வ: ப்ருதி2வீ மேஷ ஏதாம் | விசக்ரமே ஶதர்ச்சஸம் மஹித்வா | ப்ரவிஷ்ணு ரஸ்து தவஸஸ் தவீயானு| த்வேஷக்3 கு3ம் ஹ்யஸ்ய ஸ்த2விரஸ்ய நாம | ஸ்ரீவிஷ்ணவே நம: அர்க்4 யந் த3த3ாமி என பெருமாளுக்கு திருக்கைகளுக்கும் திருக் கண் களுக்கும் அர்க்யதீர்த்தத்தை அளித்து துடைக்கவும்.

மீண்டும் ஶந்நோ தேவீ: மந்த்ரத்தால் ஆசமனம்.

வைதிகமான தளிகைகளை அதாவது தக்காளி, பீட்ரூட், கேரட், பீன்ஸ், கோஸ், சௌசௌ போன்றன இல்லாமல் ஶ்ராத்தத்துக்கு எவையெல்லாம் அனுமதிக்கப்பட்டுள்ளதோ, அத்தகைய தளிகைகளை மட்டும், கண்டருளப் பண்ணுவதற் காக பெருமாள் முன்பு தீர்த்தத்தால் சுத்தம் பண்ணப்பட்ட இடத்தில் வைக்கவேணும். பொதுவாக ஸாதம், பருப்பு, தயிர் முதலியன வைக்கப்படவேணும். ஓம் பூ3ர் பு4வஸ்ஸுவ: என தளிகைகளை ப்ரோக்ஷிக்கவும்.

ஸத்யந் த்வர்த்தேந பரிஷிஞ்சாமி அம்ருதோபஸ்தரணமஸி என்று தளிகைகளை தீர்த்தத்தால் சுற்றி பரிஷேசனம் செய்ய வும். தளிகைகளில் நாராயணாய வித்மஹே... ப்ரசோதயாத் என்று பசும் நெய் மற்றும் துளஸி சேர்த்து, வலக்கையில் நடு விரல் நடுபர்வாவில் துளஸியோடு கட்டைவிரலை வைத்துக் கொண்டு, ஆள்காட்டி, நடு, மோதிரவிரல்களால் தளிகை களை தொட்டு, வலக்கையால் மட்டும் பெருமாளுடைய திருக்கை மூலம் திருவாய்க்கு கண்டருளப்பண்ணவும்.

தத3ஸ்ய ப்ரிய மபி4பாதே2ா அஶ்யாம் | நரோ யத்ர தே3வ யவோ மத3ந்தி | உருக்ரமஸ்ய ஸ ஹி ப3ந்து4 ரித்த2ா | விஷ்ணோ: பதே3 பரமே மத்3த்4வ உத்2ஸ: | ஶ்ரீவிஷ்ணவே நம: அன்னம் ஸப4க்ஷ்யம் ஸஶாகம் த3தி4ம் ச நிவேத3யாமி என பெருமாளுக்கு தளிகைகளை நிவேதனம் செய்யவும்.

பக்ஷ்யம் - பக்ஷணம், ஶாகம் - கரியமுது, ததி - தயிர், க்ஷீரம் - பால் இவற்றில் எதை எதை ஸமர்ப்பிக்கிறோமோ அவற்றை சொன்னால் போதும். இல்லாததை சொல்ல வேண்டாம்.

இத3ம்வ் விஷ்ணுர் விசக்ரமே த்ரேத4ா நித3தே4 பத3ம்| ஸமூ ட4மஸ்ய பாகு3ம் ஸுரே | ஶ்ரீவிஷ்ணவே நம: பாநீயம் த3த3ாமி என பெருமாளுக்கு உத்தரிணியால் தீர்த்தம் அளிக்க வும். ப்ரணவத்தால் தளிகைகளை அந்த: பரிஷேசனம் செய்ய வும். மீண்டும் ஶந்நோ தேவீ: மந்த்ரத்தால் ஆசமனம்.

விசக்ரமே ப்ருதி2வீமேஷ ஏதாம் | க்ஷேத்ராய விஷ்ணுர் மனுஷே த3ஶஸ்யந்து | த்4ருவாஸோ அஸ்ய கீரயோ ஜனாஸ:| உருக்ஷிதிகு3ம் ஸுஜனி மாசகார| ஶ்ரீவிஷ்ணவே நம: தாம்பூ3 லந் த3த3ாமி என பெருமாளுக்கு காம்பு, நரம்பு கிள்ளிய வெற்றிலைபாக்கை கண்டருளப்பண்ணுதல்.

ஓம் நமோ ப4க3வதே வாஸுதே3வாய ஓம் நமோ நாராயணாய எனும் மஹாமந்த்ரங்களால் பெருமாள் திருவடி களில் துளஸி முதலிய புஷ்பங்களை சேர்க்கவும். ஸர்வயஜ் ஞாதிபதியான ஸ்ரீபெருமாளை த்யானித்தவாறுபுருஷஸூக் தத்தை அனுஸந்தித்து ஸாஷ்டாங்கமாக ஸேவிக் கவும்.

நாம் செய்கின்ற யஜ்ஞங்களில் எந்த குறையிருந்தாலும் அவற்றையெல்லாம் நீக்கியருளும் இந்த பரமபாவனமான ஸர்வ காம ப2ல ப்ரதமான அகத்துப்பெருமாள் திருவாராத னத்தை வைகானஸராகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும், காலை முதல் குறைவற்ற நித்யகர்மானுஷ் டானத்தோடு செய்துய்யவேணும். இதுவே, இப்புஸ்தகத்தை பதிப்பித் தோருக்கு நாம் செலுத் தவேண்டிய ஒரே ப்ரதிபலனாகும்.